


15.04.2024

தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாட்டில் நாளை மறுநாள் மாலை 6 மணிக்கு தேர்தல் பிரச்சாரங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு.சத்யபிரதசாகு உத்தரவிட்டுள்ளார்.

2. நாடுமுழுவதும் இதுவரை 4 ஆயிரத்து 650 கோடி ரூபாய் ரொக்கம் மற்றும் பரிசுபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. தமிழ்நாட்டில் வரும் 19ஆம் தேதி நடைபெறும் மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் விறு விறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

4. மீன்பிடி தடைக்காலத்தை ஒட்டி மீன்பிடி உபகரணங்கள் பழுதுபார்க்கும் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் இன்று ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சத்யபிரதசாகு

தமிழ்நாட்டில் வரும் புதன்கிழமை மாலை 6 மணிக்கு அனைத்து தேர்தல் பிரச்சாரங்களும் நிறுத்தப்பட வேண்டும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு.சத்யபிரதசாகு உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று இதனை தெரிவித்த அவர் இரவு 10 மணிக்குமேல் அரசியல் கட்சிகள் எவ்வித பிரச்சாரத்திலும் ஈடுபடக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

மக்களவை தேர்தலுக்காக வரும் 19ஆம் தேதி அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் பொது விடுமுறை விடப்பட்டுள்ளதாகவும்,

விடுமுறை அளிக்காத தொழில் நிறுவனங்கள் மீது தொழிலாளர் நலத்துறை நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

92.8 சதவிகிதம் வாக்குச்சாவடி சீட்டுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக கூறிய அவர்,

விடுபட்டவர்களுக்கு நாளை மாலைக்குள் பூத்சிலிப் வழங்க தேர்தல் நடத்தும் அலுவலர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றார்.

பூத் சிலிப் இல்லாவிட்டாலும் வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் வாக்களிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிவிஜில் செயலியில் 4 ஆயிரத்து 100-க்கும் மேற்பட்ட புகார்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தபால் வாக்கு செலுத்த நாளை கடைசி நாள் என்றும் அவர் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பறிமுதல்

நாடுமுழுவதும் இதுவரை 4 ஆயிரத்து 650 கோடி ரூபாய் ரொக்கப்பணமும் பரிசுபொருட்களும் வாகன சோதனையின் போது பறிமுதல் செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த மக்களவை தேர்தலின் போது கைப்பற்றப்பட்ட ரொக்கத்தொகையை விட இது 3 ஆயிரத்து 475 கோடி ரூபாய் அதிகம் என்றும் கூறியுள்ளது.

45 சதவிகித மருந்து பொருட்களும், போதை பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

விரிவான திட்டமிடல், ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மற்றும் குடிமக்களின் பங்களிப்பு ஆகியவற்றால் இது சாத்தியமானதாக தெரிவித்துள்ள தேர்தல் ஆணையம் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கான செயல்பாடே பணப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதற்கு காரணம் என்றும் தெரிவித்துள்ளது.

பிரச்சாரத்தின் போது தேர்தல் விதிமுறைகளை மீறி அரசியல் கட்சி தலைவர்களுக்கு உதவிய 106 அரசு அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரச்சாரம்

தமிழகம் உட்பட நாடுமுழுவதும் 102 மக்களவை தொகுதிகளுக்கு வரும் 19-ம் தேதி நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் நாளை மறுநாள் முடிவடைவதால் அரசியல் கட்சியினர் சூறாவளி பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அகஸ்தியர்பட்டியில் பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

வரும் 26ஆம் தேதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் கேரள மாநிலம் ஆலத்தூர் தொகுதியில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பிரதமர் இன்று உரையாற்றினார்.

நீலகிரியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திரு.ராகுல்காந்தி பிஜேபி தேர்தல் அறிக்கையில் ஏழை மக்களுக்கான திட்டங்கள் எதுவும் இல்லை என்று குறை கூறியுள்ளார்.

கேரளாவில் திரு.ராகுல்காந்தி கோழிக்கோடு, வயநாடு உள்ளிட்ட பகுதிகளிலும் இன்று பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார்.

திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மற்றும் வடசென்னை பகுதிகளில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காஞ்சிபுரத்தில் அஇஅதிமுக வேட்பாளருக்கு ஆதரவு திரட்டிய கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி விவசாயத்தொழில்கள் வளர அஇஅதிமுகவிற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பிஜேபியின் தேர்தல் அறிக்கையில் நெசவாளர்களின் நலனிற்கு எதுவும் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டார்.

திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்கெட்டு போயிருப்பதாகவும் குறை கூறினார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மாநிலத்தலைவர் திரு.அண்ணாமலை காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி, தலைவர்கள் இல்லாத கூட்டணி என்று கூறியுள்ளார்.

தேர்தல் பிரச்சாரம் முடிவடைய இன்னும் இரண்டு நாட்களே எஞ்சியுள்ள நிலையில் வேட்பாளர்களும், அரசியல் கட்சி தலைவர்களும் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

வீதி வீதியாகவும், வீடு வீடாகவும் சென்று தத்தம் கட்சிகளுக்கு வாக்குகளை திரட்டும் பணிகளில் அரசியல் கட்சியினர் ஈடுபட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

100 சதவிகிதம்

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100 சதவிகித வாக்களிப்பை உறுதி செய்யும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.தர்ப்பகராஜ் தலைமையில் ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர் சுவர்களில் ஓவியங்கள் வரைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

நாமக்கல் உழவர் சந்தையில் தோட்டக்கலை துறை சார்பில் காய்கறிகளால் அலங்கரிக்கப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி அரங்கினை மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர் உமா பார்வையிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தர்மபுரி

தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறப்பு வாக்குப்பதிவு மையத்தை மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சித்தலைவருமான திருமதி சாந்தி இன்று பார்வையிட்டார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதல்முறை

தேர்தலில் வாக்களிப்பதன் அவசியத்தை தேர்தல் ஆணையம் வலியுறுத்திவரும் நிலையில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த முதல் முறை வாக்காளர்கள் வாக்களிக்க ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மீன்பிடி தடைகாலம்

தமிழ்நாட்டில் திருவள்ளூர் தொடங்கி கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி வரையிலான கிழக்கு கடல் பகுதிகளில் மீன்களின் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு மீன்பிடி தடைக்காலம் நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வந்தது.

வரும் ஜூன் 14 ஆம் தேதிவரை 61 நாட்கள் தமிழக கடல் பகுதிகளில் இந்த தடைக்காலம் அமலில் இருக்கும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தங்கள் படகுகளை நங்கூரமிட்டு கரையில் நிறுத்திவைத்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் படகுகள், வலைகளை சரிசெய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ராமநாதபுரத்தில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட விசைபடகுகள் கரையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

…….வாய்ஸ்………

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சர்வதேச நிதியம்

காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ளும் வகையில் கடன்சுமை உள்ள நாடுகளுக்கு உதவிடும் வகையிலும் சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கியின் சிறப்பு கூட்டம் வாஷிங்டனில் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

பல்வேறு நாடுகளின் வங்கியாளர்கள், நிதி வளர்ச்சித்துறை அமைச்சர்கள், கல்வியாளர்கள், தனியார், பெரு நிறுவனம் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்த சிறப்பு கூட்டத்தில் உலகளாவிய பொருளாதாரம் குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கி தோற்றுவிக்கப்பட்டு 80 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் தற்போது காலநிலை மாற்ற சவால்கள், கடன் சுமை, உணவு பாதுகாப்பு, பெருந்தொற்று போன்றவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

தூய்மையான நீர், சுகாதாரமான காற்று, எரிசக்தியை முன்னெடுத்துச்செல்வது குறித்த ஆலோசனைகளும் இதில் இடம்பெறுகின்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ராணுவ பயிற்சி

உஸ்பெகிஸ்தான் நாட்டில் ராணுவம் சார்ந்த ஆலோசனைகளை மேற்கொள்ள ராணுவ தளபதி ஜென்ரல் மனோஜ் பாண்டே 4 நாள் பயணமாக அங்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

இருநாடுகளுக்கிடையிலான இருதரப்பு பாதுகாப்பு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை வலுப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளிலும் அவர் பங்கேற்கிறார்.

அந்நாட்டு ராணுவ தலைவர்களை சந்தித்து பேச உள்ள ஜென்ரல் மனோஜ் பாண்டே இருநாடுகளும் இணைந்து பணியாற்றுவதற்கான புதிய வாய்ப்புகளை கண்டறிகிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நீதிமன்றம்

தேர்தல் விளம்பரங்களுக்கு அனுமதி அளிக்கும் மாநில குழுவின் முடிவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மட்டுமே வழக்கு தொடர முடியும் என்ற விதிமுறை முந்தைய தேர்தல்களில் பின்பற்றப்பட்டதா என்று தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கை இன்று விசாரித்த தலைமை நீதிபதி கங்காபூர்வாலா தலைமையிலான அமர்வு வரும் 17ஆம் தேதிக்குள் விளக்கமளிக்க ஆணையத்தை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பான விசாரணையை நீதிமன்றம் நாளை மறுநாளுக்கு ஒத்திவைத்தது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நீட்தேர்வு

ஆடீடீளுஇ டீனுளு உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட்தேர்வு விண்ணப்பங்களில் ஆதார் தொடர்பான திருத்தங்களை மேற்கொள்வதற்கான காலஅவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

இத்தேர்வு வரும் 5-ம் தேதி நடைபெற உள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென் தமிழகம், வட தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் டெல்டா மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த 5 தினங்களில் தமிழ்நாட்டில் அதிகபட்ச வெப்பநிலை 2 டிகிரி முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கோவில்

திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் சித்திரை தேரோட்டம் நாளை நடைபெறுவதை ஒட்டி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மதுரை விடுமுறை:

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் சித்திரைத்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்வையொட்டி, வரும் 23ம் தேதி மாவட்டத்திற்கு விடுமுறை அறிவித்து ஆட்சித்தலைவர் சங்கீதா இன்று உத்தரவிட்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

அமர்நாத்

தெற்கு காஷ்மீர் இமய பகுதியில் அமைந்துள்ள அமர்நாத் பனிக்குகை கோவில் யாத்திரை வரும் ஜூன் 29ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில் இதற்கான ஆன்லைன் பதிவு இன்று தொடங்கியது.

ஆகஸ்ட் 19ஆம் தேதிவரை 52 நாட்கள் இந்த யாத்திரை நடைபெறும்.

யாத்திரிகர்கள் இதற்கான இணையதளத்தில் மருத்துவ சான்றிதளுடன் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று சென்னை சூப்பர் கிங்ஸ் மும்பை இண்டியன்ஸை 20 ரன் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு